மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : OS 147/22

பெயர் : வெங்கட்ராமன் (PW1)

த/பெ. : கிருஷ்ணமூர்த்தி

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17 th day of September 2025

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பாண்டிச்சேரியில் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறேன்.எனது அப்பா பெயர் கிருஷ்ணமூர்த்தி .எனது அண்ணன் ராமசுப்பு தற்போது என்ன பணியில் உள்ளார் என்றால் தினமலர் நாளிதழில் எடிட்டராக உள்ளார்.தபசில் சொத்திற்கான தீர்வை ரசீதுகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும்.

2)தபசில் சொத்தை நான் அனுபவித்தற்கான நான் தீர்வை ரசீதுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.தபசில் சொத்து எங்குள்ளது என்றால் தூத்துக்குடி மாவட்டம் பாண்டியாபுரம் என நினைக்கிறேன் சரியாக நினைவில் இல்லை.தபசில் சொத்தின் நான்கு மால்களின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது உறவினர்கள் தான் உள்ளார்கள் பெயர் ராமசுப்பு , ஆதிலிங்கம் இடம் உள்ளது திசை நினைவில் இல்லை.தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு நினைவில் இல்லை.நான் அனுபவம் செய்திருந்தால் மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

3)நான் 30 வருடங்களாக பாண்டிச்சேரியில் இருப்பதால் இங்குள்ள சொத்தை நான் நேரடியாக அனுபவித்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான்.வா.சா,ஆவணம் 1 ஆனது யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் என் தாத்தா எனக்கும் என் அண்ணனுக்கும் எழுதிக்கொடுத்தது.நான் எனது அண்ணன் ராமசுப்புவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.என்னுடைய ஆதார் எண் என்ன என்றால் 4429 2842 1938.நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்தை 2017 ஆம் வருடம் போலியாக ஆவணங்கள் உற்பத்தி செய்ததால் அது சம்மந்தமாக மாவட்ட குற்றபிரிவில் புகார் மனு கொடுக்கப்பட்டு அதன்பின்பு வழக்கு தாக்கல் செய்தேன்.

4)2017 ல் முதல் ஆவணமும் 2018ல் இரண்டாவது முறையாக ஆவணமும் ஏற்படுத்தினார்கள்.நான் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி விவரங்கள் 2019 ஆண்டில் தெரிய வந்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை ஆனால் புகார் மனு கொடுத்துள்ளேன்.வழக்குரையிலும் மேற்படி விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்பதாலும் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் வா.சா ஆவணம் 1 ல் உள்ள எனது சொத்தை பொறுத்து மட்டும் தான் மோசடி கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளதால் எனது அண்ணனை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை.

5)1980 ஆம் ஆண்டில் ஆவணத்தின் அடிப்படையில் மட்டுமே நான் உரிமை கோரியுள்ளேன் என்றால் சரிதான்.எனது தாத்தாவிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.எனது அண்ணனுக்கு வேறு சொத்து கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.வா.சா,ஆவணம் 1ன் படி தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதாக இருந்தால் எனது அண்ணனுக்கும் பாத்தியம் உண்டு என்று சொன்னால் அவருக்கு சொத்து தனியாக கொடுக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.